புற்றுநோயால் உயிரிழக்கும்

70% பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பாதிப்பு

புற்றுநோயால் உயிரிழக்கும் 70 சதவீத பெண்கள் மார்பக புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர் என பொது சுகாதாரத்துறை இயக்குனர் செல்வ விநாயகம் தெரிவித்துள்ளார்.

மனிதனின் வாழ்வியல் மாற்றம், உணவு பழக்கம், போதை பழக்கம், மரபணு மாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணத்தால் இந்தியாவில் மட்டுமின்றி உலக அளவில் புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருகிறது. நுரையீரல் புற்றுநோய், வாய் தொடர்பான புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் மற்றும் வயிறு தொடர்பாக புற்றுநோய் ஆகிய 5 புற்றுநோய் இந்தியாவில் அதிகமாக பரவி வருகிறது.

இந்த மார்பக புற்றுநோய் தவிர மற்ற புற்றுநோய்கள் அனைத்தும் ஆண் மற்றும் பெண் என இருவருக்கும் வரும். ஆனால் மார்பக புற்றுநோய் பெண்களை மட்டுமே அதிக அளவில் பாதிக்கும். மார்பகத்தில் உள்ள செல்கள், கட்டுப்பாடு இன்றி பெருகும் நிலையில் புற்றுநோய் கட்டி ஏற்படுகிறது.

உலகளவில் 1990ல் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 2 மில்லியனாக இருந்தது, அது தற்போது கிட்டத்தட்ட 4 மில்லியனாக அதிகரித்துள்ளது. இந்தியாவை பொறுத்தவரையிலும் 1 லட்சம் பெண்கள் பரிசோதனை மேற்கொண்டால் அதில் 25 பெண்கள் மார்பக புற்றுநோயால் பாதிப்பு அடைகின்றனர். 10 வருடங்களுக்கு முன்பு வரை 16 பெண்கள் மட்டுமே பாதிக்கப்பட்டு இருந்த நிலையில் அது தற்போது 25 ஆக அதிகரித்துள்ளது. தமிழகத்தில் மார்பகம் புற்றுநோய் பாதிப்பு சற்று அதிகமாகவே உள்ளது. 1 லட்சம் பெண்கள் பரிசோதனை மேற்கொண்டால் அதில் கிட்டத்தட்ட 37 பெண்கள் மார்பக புற்றுநோயால் பாதிப்பு அடைகின்றனர் என ஆய்வில் தெரியவந்துள்ளது. பொதுவாக, 50 வயதுக்கு மேல் உள்ள பெண்களுக்கு மார்பக புற்றுநோய் வர தொடங்கும். 60 வயதுக்கு மேல் 8ல் 1 பெண்ணுக்கு இந்த மார்பக புற்றுநோய் ஏற்படுகிறது.

இந்நிலையில் மார்பக புற்றுநோயின் அறிகுறிகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முழுவதும் "மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு' மாதமாக கடைபிடிக்கப்படுகிறது. இருப்பினும் புற்றுநோயால் இறக்கும் 70 சதவீத பெண்களுக்கு மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர் என பொது சுகாதாரத் துறை இயக்குனர் செல்வவிநாயகம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறியதாவது: பெண்களுக்கு அதிகமாக பாதிப்பை வழங்கும் நோயாக மார்பக புற்றுநோய் உள்ளது. மேலும் புற்றுநோயால் இறக்கும் 70 சதவீத பெண்கள் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். தாமதமாக சிகிச்சைக்கு வருவதே இதற்கு முக்கிய காரணம். தமிழகத்தில் மார்பக புற்றுநோயை கட்டுப்படுத்த 2015 முதல் மார்பக பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக 30 வயதை கடந்த அனைவரையும் இந்த பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என அனைத்து மாவட்டத்திலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பெண்கள் மாதம் ஒரு முறை சுயபரிசோதனை செய்ய வேண்டும். மார்பகத்தில் ஏதாவது மாற்றம் இருந்தால் மருத்துவரை அணுக வேண்டும். 30 வயதை கடந்த அனைத்து பெண்களும் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

கிராமப்புறத்தில் உள்ள பெண்களை விட நகரத்தில் உள்ள பெண்களுகே மார்பக புற்று நோய் அதிகம் ஏற்படுகிறது எனவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் சுரேஷ் குமார் கூறியதாவது: மார்பக புற்றுநோய் தற்போது அதிகரித்து வருகிறது குறிப்பாக கிராமப்புரத்தை காட்டிலும் நகரத்தில் உள்ள பெண்களுக்கு இது அதிக பாதிப்பை ஏற்படுகிறது. கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் அளவீடுகளுக்கான தேசிய கவுன்சில் ஆய்வுப்படி தமிழகத்தில் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 4சதவீதம் அதிகரித்து வருகிறது என தெரிவித்துள்ளது. இந்த புற்றுநோய் பொதுவாக 4 நிலை உள்ளது. முதல் நிலையில் சிகிச்சை எடுத்துக்கொண்டால் அறுவை சிகிச்சை செய்து 100 சதவீதம் குணப்படுத்த முடியும், அந்த புற்றுநோய் 2ம் நிலையை அடைந்து இருந்தால் கதிரியக்க சிகிச்சை, கீமோதெரபி மற்றும் அறுவை சிகிச்சை செய்து 40 சதவீதம் முழுமையாக குணப்படுத்தி விடலாம். மார்பக புற்று நோய் ஏற்பட பல்வேறு காரணங்கள் உள்ளது.

குறிப்பாக உடலில் ஈஸ்ட்ரோஜன் அதிகம் இருத்தல், கொழுப்பு உள்ள உணவு களை உண்ணுதல், மது அருந்துதல், கர்ப்ப தடை மாத்திரைகள் எடுத்துக்கொள்வது, 30 வயதுக்கு மேல் முதல் பிரசவம் போன்றவற்றால் மார்பக புற்று நோய் ஏற்படலாம். குரோமோசோம்களில் BRCA 1&2 என்ற மரபணுக்கள் தோன்றுவதும்கூட மார்பகப் புற்றுநோயை உருவாக்கலாம். இதை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை முறையாக எடுக்க வேண்டும். முக்கியமாக, மக்கள் மூடநம்பிக்கையை பின்பற்றக்கூடாது. முறையாக மருத்துவர் ஆலோசனையை பின்பற்ற வேண்டும்.

ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனையில் மார்பக புற்றுநோய்க்கு சிறப்பாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக இங்கு டும்மர் போர்டு (tumor board) உள்ளது. எனவே ஒரு புற்றுநோயாளிக்கு என்ன சிகிச்சை அளிக்கவேண்டும், எவ்வாறு அளிக்கவேண்டும் என்றெல்லாம் அங்கு ஆலோசனை செய்த பிறகு சிகிச்சை அளிக்கப்படும். பரிசோதனை செய்து புற்றுநோய் கண்டறிந்த பிறகு 10 நாட்களுக்குள் சிகிச்சை தொடங்கப்படும். வருடத்திற்கு 2000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு புற்றுநோய் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு மட்டுமின்றி பிற மாநிலத்தில் இருந்தும் சிகிச்சைக்காக வருகின்றனர். பொதுவாக தனியார் மருத்துவமனையில் மார்பக புற்றுநோய் சிகிச்சைக்கு 7 முதல் 8 லட்சம் வரை செலவாகும். ஆனால் ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனையில் அனைத்து சிகிச்சைகளும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

அக்டோபர் மாதம் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக கொண்டாடப்பட்டு வருகிறது. எனவே இந்த நேரத்தில் மக்கள் குறிப்பாக பெண்கள், இதுதொடர்பாக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதே மருத்துவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



ஆண்களுக்கும் மார்பக புற்றுநோய்

பெண்களுக்கு மட்டுமே மார்பக புற்றுநோய் வரும் என்ற எண்ணம் தவறானது. ஆண்களுக்கும் மார்பக புற்றுநோய் வரும். ஆனால் அது 0.5 - 1 சதவீதம் மட்டுமே வாய்ப்பு உள்ளது. குறிப்பாக குடும்பத்தில் புற்றுநோய் பாதிப்பு வரலாறு இருந்தால் இது ஏற்படும்.

மார்பக புற்றுநோய் அறிகுறிகள்

மார்பில் வலி இல்லாத கட்டி அல்லது வீக்கம், மார்பக தோலில் அதீத சுருக்கம், அக்குளில் வலியில்லாத கட்டி, மார்பகத்தில் புண் ஏற்பட்டு ரத்த கசிவு.

மார்பக புற்றுநோயில் இருந்து தடுக்கும் வழிகள்

மார்பகத்தில் ஏதேனும் மாற்றம் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகவேண்டும். 30 வயதுக்கு மேல் உள்ள பெண்கள் சுயபரிசோதனை அவ்வப்போது செய்து கொள்ளவேண்டும். 40 வயதுக்கு மேல் உள்ள பெண்கள் வருடத்திற்கு ஒரு முறை மருத்துவமனை சென்று 'மேம்மோகிராம்' பரிசோதனை செய்யவேண்டும். உணவு பழக்கத்தை முறையாக கடைபிடிக்க வேண்டும்.

அரசு மருத்துவமனையில் இலவச சிகிச்சை

பொது சுகாதாரத்துறை தகவல்

500 ரோபோடிக் இதய அறுவை சிகிச்சை

▶ அப்போலோ மருத்துவமனை 500 ரோபோடிக் இதய அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து சாதனை படைத்துள்ளது. இதுதொடர்பான, செய்தியாளர்கள் சந்திப்பில் அப்போலோ மருத்துவமனை குழுமத்தின் தலைவர் டாக்டர் பிரதாப் ரெட்டி, இதய அறுவை சிகிச்சை நிபுணர் யூசுப் மற்றும் மருத்துவ குழுவினர்.

சென்னை, அக்.23: அப்போலோ மருத்துவமனை 500 ரோபோடிக் இதய அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளது. இதுதொடர்பான செய்தியாளர்கள் சந்திப்பு நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் விடுதியில் நடந்தது. அப்போது அப்போலோ மருத்துவமனைகள் குழுமத்தின் தலைவர் டாக்டர் பிரதாப் ரெட்டி, இதய அறுவை சிகிச்சை நிபுணர் எம்.எம்.யூசுப் உள்ளிட்டோர் கூட்டாக நிருபர்களிடம் கூறியதாவது:

ரோபோடிக் உதவியுடன் செய்யப்படும் இதய அறுவை சிகிச்சை, ஸ்டெர்னோடோமி அல்லது மார்பில் பெரிய அளவில் துளையிட்டு சிகிச்சை செய்யாமல் துல்லியமான சிகிச்சையை மேற்கொள்வதன் மூலம் இதய பராமரிப்பில் புதிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிநவீன தொழில்நுட்பம், சிறிய கீறல்கள் மூலம் சிக்கலான அறுவை சிகிச்சையை செய்ய முடியும். இதில் சிறிய ரோபோ கைகள், 3டி கேமரா ஆகியவை பயன்படுத்தப்படுகிறது. இதனால் திறந்த இதய அறுவை சிகிச்சையை விட பல வகையான மேம்பட்ட நன்மைகளை வழங்குகிறது.

குறுகிய காலத்தில் குணம் அடைந்து நலம் பெறுதல், தொற்றுநோய்க்கான ஆபத்து இல்லாமை ஆகிய முக்கிய பலன்கள அளிக்கிறது. பல நோயாளிகள் அறுவை சிகிச்சைக்கு அடுத்த நாளே நடக்க தொடங்குகின்றனர். 3 முதல் 4 நாட்களுக்குள் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்ப முடியும். திறந்த இதய அறுவை சிகிச்சையில், முழு அளவில் குணம் அடைந்து இயல்பு நிலைக்கு திரும்ப 3 முதல் 6 மாதங்கள் தேவைப்படும். அத்துடன் இந்த நவீன சிகிச்சை முறையில் 2 முதல் 3 வாரங்களுக்குள் இயல்பு நிலைக்கு திரும்ப முடியும்.

500 ரோபோடிக் இதய சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கும் ஒரு மைல்கல்லை எட்டுவது என்பது நவீன மருத்துவ தொழில்நுட்பத்தின் வளர்ந்து வரும் திறன்களுக்கும், எங்களிடம் வரும் நோயாளிகள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் ஒரு சான்றாகும். ரோபோ உதவியுடன் செய்யப்படும் அறுவை சிகிச்சை மூலம் 30 முதல் 60 வயதுடைய நோயாளிகளுக்கு அதிக அளவில் பயன் அளிக்கும். இவ்வாறு தெரிவித்தனர்.

அப்போலோ மருத்துவமனை சாதனை

தேசிய ஊரக சுகாதார திட்டத்தின்கீழ் பணியாற்றும்

ஒப்பந்த செவிலியர்களுக்கு மகப்பேறு பலன்

சென்னை, அக். 23: மத்திய அரசின் தேசிய ஊரக சுகாதார திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 11 ஆயிரம் செவிலியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் செவிலியர்களுக்கு 270 நாட்கள் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்க தமிழக அரசு மறுத்ததை எதிர்த்து எம்.ஆர்.பி. செவிலியர் அதிகாரமளித்தல் சங்கம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் மற்றும் நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஒப்பந்த தொழிலாளர்கள் என்பதால் செவிலியர்களுக்கு மகப்பேறு சலுகைகள் வழங்க முடியாது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதை ஏற்க மறுத்த நீதிபதிகள், சட்டத்தில் கூறப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் ஒப்பந்த பணியாளர்களுக்கும் மகப்பேறு சலுகைகளை மறுக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஒப்பந்த பணி நியமன நிபந்தனைகளைக் கூறி மகப்பேறு சலுகைகளை மறுப்பதை ஏற்க முடியாது. ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட செவிலியர்கள் மகப்பேறு சலுகை கோரி அளித்து நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை மூன்று மாதங்களில் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிட்.
RELIANCE Asset Reconstruction
கார்பரேட் அலுவலகம்: 11ஆவது தளம், வடக்குப் பக்கம், ஆர் டெக் பார்க், மேற்கு விரைவு நெடுஞ்சாலை சற்றுத்தொலைவில், கோரிகான் (கிழக்கு) மும்பை–400 063

சுவாதீன அறிவிப்பு [காண்க விதி 8(1)] [அசையாச் சொத்துக்காக]

இவ்வாறிருக்க, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிட், எஸ்பிஜி பேங்க் ஆர்எஆர்சி 035 பொறுப்பாட்சியின் பொறுப்பாளர் ஆனது 20–04–2017 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தப் பத்திரம் மூலம் மூல கடனீந்தோர் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா வசமிருந்து நிதிச் சொத்துகளைக் கைப்பற்றியுள்ளது. ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கல் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை [அமலாக்கம்] விதிகள், 2002 இன் விதி 3 உடன் 13(2) கீழ் 27.06.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு வழங்கி, திரு. 1. M/s. எகனாமிக் பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரீஸ், மனை எண்.4, எண்.46, கோவிந்தன் தெரு, அய்யாவு காலனி, அமிஞ்சிக்கரை, சென்னை–600029 மற்றும் 2.V ராஜு, மனை எண்.4, எண்.46, கோவிந்தன் தெரு, அய்யாவு காலனி, அமிஞ்சிக்கரை, சென்னை–600029

ஆகியோர் அறிவிப்பில் குறிப்பிட்ட நிலுவை ரூ.3,08,59,416.81/– (ரூபாய் மூன்று கோடியே எட்டு லட்சத்து ஐம்பத்து ஒன்பது ஆயிரத்து நானூற்று பதினாறு மற்றும் பைசா எண்பத்தொன்று மட்டும்) தொகையை 26.06.2024 தேதி வரை அதற்கான மேற்கொண்டு வட்டியுடன், கோரிக்கை அறிவிப்பு தேதியிலிருந்து அறுபது (60) நாட்கள் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்கள் நிலுவைத்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதால், இதன்மூலம் அறிவிப்பதாவது கீழேக் கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்டச் சொத்தினை இந்த 18 அக்டோபர் 2024 நாளில் சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்(கள்) /உப–கடன்தாரர்(கள்) அவர்களுக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் 26.06.2024 தேதிய ரூ.3,08,59,416.81/– (ரூபாய் மூன்று கோடியே எட்டு லட்சத்து ஐம்பத்து ஒன்பது ஆயிரத்து நானூற்று பதினாறு மற்றும் பைசா எண்பத்தொன்று மட்டும்) மொத்தத் தொகைக்காக அதைப் பணமாக்கும் காலம் வரை அதற்குரிய எதிர்கால வட்டியுடன் ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் வசூலுக்கு உட்படும்.

கடனீட்டு சொத்துகள் விவரம்

மனை எண்.4, கோவிந்தன் தெரு, அரும்பாக்கம் கிராமம், சென்னை–600029 இல் பழைய சர்வே எண்.41/2 (40–B) & 38, T.S.No.37, பிளாக் எண்.27 இல் கட்டிடத்துடன் கூடிய 2400 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலமும் கட்டிடமும் உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கில்: பி.ராதாவுக்குச் சொந்தமான மனை எண்.3 (அளவீடு 45 அடி), தெற்கில்: 20 அடி சாலை (அளவீடு 43 அடி 3 அங்குலம்), கிழக்கில்: 30 அடி சாலை (அளவீடு 54 அடி), மேற்கில்: மனை எண்.4A (அளவீடு 54 அடி). சென்னை தெற்கு பதிவு மாவட்டம், கோடம்பாக்கம் சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது.

நாள்: 18.10.2024
இடம்: அரும்பாக்கம், சென்னை

ஒம்/–அதிகாரப்பூர்வ அதிகாரி,
ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிட்.

கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்
Can Fin Homes Ltd (Sponsor : CANARA BANK)
HOME LOANS + DEPOSITS
CIN: L8511OKA1987PLCOO8699
பெருங்குடி கிளை
எண்.14, முதல் தளம், பழைய மகாபலிபுரம் சாலை, கந்தன்சாவடி, பெருங்குடி, சென்னை - 600 096.
போன் : 044 24965656/7625079151,
மின்னஞ்சல்: omr@canfinhomes.com

சுவாதீன அறிவிப்பு
(விதி 8(1)) (அசையா சொத்துக்களுக்காக)

கீழே கையொப்பமிட்டவர் கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கின்றபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 மற்றும் மேற்கூறிய சட்டத்தின் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி **01.08.2024** தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி கடன்தாரர்களான **1. திரு.சேகர்.M.R (கடன்தாரர்), 2.திருமதி.குப்புலஷ்மி.S (இணை கடன்தாரர்),** ஆகியோர்களுக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கடன்பாக்கி தொகையான **ரூ.18,64,563/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து ஐநூற்று அறுபத்து மூன்று மட்டும்)** மேலும் முழு தொகை வசூல் ஆகும் தேதி வரையிலான ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி பின்வட்டியுடன் தொகையை இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் தொகையை திருப்பி செலுத்தத் தவறியுள்ளனர், இதன் மூலம் கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இதன்கீழ் விவரிக்கப்பட்ட சொத்தினை **18.10.2024** நாளில் சுவாதீனம் மேற்கொண்டுள்ளார்.

கடனீட்டு சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக மேற்குறிப்பிட்ட சட்டம் பிரிவு 13 உட் பிரிவு (8) - ன் கீழ் கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

கடன்தாரருக்கு குறிப்பிட்டும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கையும் கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய கடன் பாக்கி தொகையான **ரூ.18,64,563/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து ஐநூற்று அறுபத்து மூன்று மட்டும்)** மற்றும் அதற்குரிய வட்டியுடன் செலுத்துவதற்குட்பட்டது.

அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தின் அட்டவணை: (அசையா சொத்தின் விவரங்கள்): காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் திருவள்ளூர் துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுக்கா, நத்தமேடு, பாக்கம் கிராமத்தில் "M.S. ராயல் கேட்" என அறியப்படும் மனைப்பிரிவில் சர்வே எண்.729/1-ன்படி மனை எண்.172 (மேற்கு பகுதி) -ல் உள்ள **840 சதுர அடி** பரப்பளவு மனையுடன் கூடிய குடியிருப்பு வீடு மற்றும் மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.173, தெற்கில் : 20 அடி சாலை, கிழக்கில்: மனை எண்.172 (கிழக்கு பகுதி), மேற்கில் : சமுதாய நலக்கூடம், அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 21 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 21 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 40 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 40 அடி.

நாள்: 22.10.2024
இடம்: பெருங்குடி

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அதிகாரி
கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்

லாப நோக்கமின்றி

15 வகையான மளிகை பொருட்கள் ₹499க்கு விற்பனை

▶ கோபாலபுரம் அமுதம் அங்காடியில் ₹499 விலையில் ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு தேவையான 15 மளிகைப் பொருட்கள் அடங்கிய அமுதம் பிளஸ் மாளிகை தொகுப்பு விற்பனை திட்டத்தை அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார். அருகில், கூட்டுறவு, உணவு பாதுகாப்பு துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர்.

அமுதம் அங்காடியில் அறிமுகம்

அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்

சென்னை, அக். 23: அமுதம் மக்கள் அங்காடியில் குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு தேவையான 15 வகையான மளிகை பொருட்கள் ₹499க்கு விற்பனை செய்யும் திட்டத்தை அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கிவைத்தார்.

பண்டிகை காலங்களை கவனத்தில் கொண்டும், விலை வாசியை குறைக்கும் விதமாகவும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வீடுகளில் அன்றாடம் பயன்படுத்தப்படும் 15 வகையான மளிகைப்பொருட்கள் அடங்கிய மளிகை தொகுப்பின் விற்பனையை லாபநோக்கமின்றி ₹499 விலையில் "அமுதம் பிளஸ் மளிகைத் தொகுப்பு " என்ற பெயரில் நேற்று கோபாலபுரம் அமுதம் மக்கள் அங்காடியில் அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்.

மஞ்சள்தூள், உப்பு, கடுகு, சீரகம், வெந்தயம், சோம்பு, மிளகு, மிளகாய், தனியா, புளி, உளுத்தம் பருப்பு, கடலைப்பருப்பு, பாசிப்பருப்பு, வறுகடலை மற்றும் பெருங்காயத்தூள் ஆகிய பொருட்கள் இந்த மளிகை தொகுப்பில் அடங்கியுள்ளன.

இந்த மளிகை தொகுப்பின் விற்பனை முதற்கட்டமாக சென்னையில் கோபாலபுரம், அண்ணாநகர், பெரியார் நகர் அமுதம் மக்கள் அங்காடிகளிலும், அடையாறு, சூளைமேடு, சிந்தாதிரிப்பேட்டை, கலைஞர் கருணாநிதி நகர், நந்தனம் பகுதிகளில் உள்ள 10 அமுதம் நியாய விலை கடைகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

நிகழ்ச்சியில் எம்பி தயாநிதி மாறன், கூட்டுறவு, உணவு துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், மாநகராட்சி துணை மேயர் மகேஷ்குமார், ஆயிரம் விளக்கு தொகுதி எம்எல்ஏ எழிலன், சென்னை மாநகராட்சி பணிகள் குழு தலைவர் சிற்றரசு, 9வது மண்டல குழு தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் நந்தினி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அண்ணாதுரை, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் பழனிசாமி, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் மோகன் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்
OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.
CIN No.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com, தொலைபேசி: 044–243 23033
அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண்: + 91 93446 84194 /+91 98840 62068

[பிற்சேர்க்கை–IV-A]
[விதி 8(6) விதிகளை காணவும்]
அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) அடமானதாரர்(கள்)ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஓஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் கையக சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஓஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 33/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) எடெல்வீஸ் வீட்டுவசதி நிதி லிமிடெட் (உரிமையீந்தோர்) வசமிருந்து 30.03.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஓஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஓஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள